REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை : ஐப்பசி 29உ வியாழன் (14—11—57) ★ ★ வெளியூர்: ஐப்பசி 30உ வெள்ளி (15—11—57) [இதழ் 131

பொதுத்தேர்தலில் 'மை' விழுங்கிய பணம் ரூ. 2½ இலட்சம்!

புதுடில்லி, நவ. 14—

அண்மையில் நடந்து முடிந்த இரண்டாவது பொதுத் தேர்தலின்போது, வாக்காளர்களின் விரலில் தடவிய அழிக்க முடியாத 'மை'யைப் பொறுத்த மட்டிலும் அரசாங்கத்திற்கு ரூ. 2,57,638 செலவாயிற்றாம்!

காங்கிரசின் கண்ணியம் இதுதானா?

கழகம் அமைப்பதே பொறுக்க முடியாததா?

பிறர் கருத்தைக் கேட்காதீர் என்பது கோழைத்தனமல்லவா?

ஒதூரில் பொதுச்செயலாளர் முழக்கம்

11-11-57 மாலை 6-மணிக்கு ஒதூர் நியூ டவுன் கூட்டுறவு காலனி மைதானத்தில் தி. மு. க. கிளைத் துவக்க விழா தோழர் இரா. சகநாதன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டம் நடைபெறுவதற்கு முன்பு மேடை அமைப்பை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த தோழர் இரா. சகநாதன் அவர்கள் மாலை 3-45 மணியளவில் சில குண்டர்களால் தாக்கப்பட்டு முகவாய்க் கட்டையில் படுகாயமடைந்தார்.

இச்சம்பவத்தைக் குறிப்பிட்டு, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"உணர்ச்சியும், ஊக்கமும், நல்ல எண்ணமுங்கொண்டவர்களும், மாணவர்களும், தி. மு. கழகத்தை இப்பகுதியில் அமைத்து, நல்ல தொண்டாற்ற வேண்டுமென எண்ணினர். அதனைப் பார்த்து நான் பெருமையும் பூரிப்பும் அடைகிறேன்.

"இப்பகுதியில் தி. மு. கழகக் கொள்கைகளைப் பரப்ப முயற்சி எடுத்துக்கொண்ட நண்பர் இரா. சகநாதன் காங்கிரஸ் நண்பர்களால் தாக்கப்பட்டிருக்கிறார்; அவரது முகவாய்க்கட்டை உடைந்து, சட்டை யெல்லாம் குருதி படிந்து உள்ளது. மூவர் தாக்கினர் என்று கேள்விப்பட்டேன். குருதிபடிந்த சட்டை கண்டு உள்ளபடியே மகிழ்ச்சி அடைந்தேன். தி. மு. கழகக் கொள்கைகளை மக்களுக்கு மூன்று மணிநேரம் பேசி விளக்குவதை விட, இந்நிகழ்ச்சியே விளக்கித் தெரிவிக்கும்.

"ஒதூர் மக்களுக்கு, தோழர் சகநாதனின் இரத்தக்கறை படிந்த சட்டை காட்டும்—அரசியலில் கண்ணியம், கடமை, நாணயம், நேர்மை யாரிடத்தில் உள்ளது—என்பதை! சகநாதனுக்குக் கொடுத்த அடி, மக்களிடையில் அகிம்சையைப்போதித்த காந்தியாருக்குக் கொடுத்த அடியென்றுதான் கருதவேண்டும்.

தோழர் சகநாதன் அடிபட்டு மாண்டிருந்தாலும் நான் ஆச்சரிபட்டிருக்கமாட்டேன்; பிறக்கும் பொழுதே அத்தனைப் பேரும் தி. மு. க. உறுப்பினர்களல்ல; இப்பொழுது கழகத்தில் உள்ளவர்கள் அனைவருமே காங்கிரசில் இருந்தவர்கள்தான்; நானும் காங்கிரசில் ஒன்றியிருந்தேன்; அக்காலம் காங்கிரசில் நல்ல குணம்—அரசியல் நாகரீகம்—நல்ல எண்ணம்—நேர்மை, நாணயம் கொண்டவர்கள் இருந்த காலம்! அக்காலத்தில் என்னைப் போன்ற இளைஞர்கள் கதர் கட்டி தேசியத்தை வளர்த்தார்கள். அப்பொழுது பெர்மிட், கொள்ளை இலாபம் அடிக்கும் எண்ணம், கள்ள மார்க்கெட் இல்லாத காலம்! அடி, உதைபட்டுதான் தேசியத்தை வளர்த்தோம், என்றால், அதற்கும் ஈடுபட்டவர்கள் நாங்கள். மதுரையில் நடந்த கருப்புச்சட்டை மாநாட்டிற்குத்

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★

'நம் நாடு' தனி இதழ்

தேசீய கௌரவப் பாதுகாப்புச் சட்டம்பற்றி சட்டமன்றத்தில் கடந்த 11—11—57 அன்று அண்ணா அவர்கள் ஆற்றிய உரை—சட்டசபையில் ஆற்றியபடியே—17—11—57 ஞாயிறன்று வெளிவரவிருக்கும் 'நம் நாடு' தனி இதழில் இடம் பெறும்.

சென்னை நகரில், அன்று காலையே இதழ் கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளியூர் விற்பனையாளர்கள் தங்களின் தேவைக்கு, முன் கூட்டியே தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

—நிர்வாகி

★★★★★★★★★★★★★★★★★

பல்கலைக்கழகங்கள் மீது அமைச்சர் சுப்பிரமணியம் பாய்ச்சல்

அவற்றின் சுதந்தரம் பற்றிக் கூக்குரலிடுகிறார்

சென்னை, நவ. 13—

"பல்கலைக்கழகங்களின் சுயேச்சை என்ற பெயரில் பணம் பாழாவதை நாம் அனுமதிக்க முடியாது"

என்று, கல்வி மந்திரி சுப்பிரமணியம் பேசினாராம், மேல்(சட்ட) சபையில்!

"பல்கலைக்கழகத்திற்குச் சுதந்தரம் இருக்கிறது; அதனால் அவர்களுக்குப் பணத்தைப் பாழடிக்கவும் உரிமை இருக்கிறது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது" என்றும் அவர் பேசினாராம்!

"சர்க்கார் மானியம் கொடுக்கிறது என்பதினாலேயே, சர்க்கார், கல்வியை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா?" என்று, டாக்டர் வி. கே. ஜான் கேட்டார்.

உடனே மந்திரி, 'பல்கலைக் கழகக் கல்வியின் அடக்கம் கட்டுப்படுத்தப்படவேண்டுமென நாங்கள் விரும்பவில்லை; ஆனால், நீங்கள் மானியம் வேண்டுமென விரும்பினால், அந்த மானியம் எப்படிச் செலவு செய்யப்படுகிறது என்பதைக் கேட்க சட்டசபை உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. அவர்களைத் திருப்திப் படுத்தினாலன்றி அவர்களை மானியக் கோரிக்கையை அங்கீகரிக்குமாறு நான் கேட்கமுடியாது' என்றும் கூறினாராம்!

"பல்கலைக்கழகச் சுதந்தரம் என்ற வாதம், நமது பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண உதவாது; அவை பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கவே உதவும்" என்றும் அவர் பேசியிருக்கிறார்.

'ஆட்சி மொழி என்றே அரசியல் சட்டம் கூறுகிறது'

'தேசீய மொழிகள் இரண்டென்றே நான் கருதுகிறேன்'

'இந்தி பேசுவோரில் எத்தனை பேருக்கு எழுதப் படிக்கத் தெரியும்?'

மேல் சபையில் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி

சென்னை, நவ. 13—

"மொழிப் பிரச்சினையைப் பொறுத்து, ஆட்சி மொழிக் குழுவிடத்தில் சென்னை பல்கலைக் கழகம் தனது கருத்தைத் தெளிவாக—விளக்கமாகத் தெரிவித்திருக்கிறது; இப்போதும் அந்தக் கருத்துக்களை மாற்றிக்கொள்ளவில்லை.

"எல்லாப் பிரதேசங்களுக்குமான ஒரே மொழி என்று சொல்லத்தக்கவகையில் ஒரு மொழி தேவை என்றோ, அல்லது அப்படி ஒரு மொழி உருவாக்க முடியும் என்றோ நாங்கள் நம்பவில்லை.

"அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதெல்லாம் ஆட்சி மொழி என்பதை தவிர, தேசீய மொழி என்பதல்ல! எப்படியோ 'தேசீய மொழி' என்ற சொல் வழக்கத்திற்கு வந்திருக்கிறது. தேசீய மொழி என்று கூறப்பட்டபோது நான் கருதியது எல்லாம் இரண்டு மொழிகள்தான்; ஒன்று—திராவிட மொழிகளுக்குத் தமிழ்: மற்றொன்று—ஆரிய மொழிகளுக்கு சமஸ்கிருதம் என்பதுதான்.

"எப்படியோ, இந்தி பேசுகிற மக்களின் எண்ணிக்கையை நமது வாதத்திற்கு எதிராகக் காட்டுகிறார்கள். இந்தி பேசுவோரில் எத்தனைப் பேருக்கு அது எழுதப் படிக்கத் தெரியும் என்று நான் கேட்க விரும்புகிறேன்"

—என்பதாக டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள், சென்னை மேல் (சட்ட) சபையில், கல்வித் திட்ட விவாதத்தின்போது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பல்கலைக் கழகங்களின் சுதந்தரம் பற்றி மந்திரி சுப்பிரமணியம் பேசியதற்குப் பதிலளித்துப் பேசுகையில் டாக்டர் முதலியார் குறிப்பிட்டதாவது :—

"பல்கலைக் கழகங்களுக்கு, சுதந்தரம் என்று சொல்கிறார்களே, அந்தச் சுதந்திரம் எங்களுக்கு தேவையே இல்லை. உண்மையைச் சொல்லித்தான் ஆக வேண்டும். செருப்பு எங்கே கடிக்கிறது என்பது, அதை அணிபவனுக்குத்தான் தெரியும். சுதந்தரம், சுதந்தரம் என்கிறார்களே, அது எந்த வகையிலும், எந்த அர்த்தத்திலும் சுதந்தரமாகாது. பல்கலைக் கழகங்களின் பல துறைகளில், மத்திய சர்க்காரிடமிருந்தும், மாநில சர்க்காரிடமிருந்தும் கட்டளைகள் வந்து கொண்டுதானிருக்கின்றன.

"எனவே, எனது இந்த வயதில், மாற்றுக் கருத்துடையவர்களுடன் நான் சண்டை போட்டுக்கொண்டிருக்க முடியாது. எனது வாழ்வின் 'மாலை நேரம்' நெருங்கிவிட்ட சமயத்தில் அப்படிச் செய்வதும் முறையாகாது."

முதல் செயற்கைச் சந்திரன் எரிந்து சாம்பலாகும்?

ரஷ்யா முதன் முதல் பறக்கவிட்ட செயற்கைச் சந்திரன் இவ்வாண்டு முடிவுவரை வானவெளியில் சுற்றிக்கொண்டு இருந்துவிட்டு, பிறகு எரிந்துபோய்விடும் என, 'பிராவ்தா' கூறிற்றாம்!

கலகங்களின் பிறப்பிடம் அமைதியின் பிறப்பிடமாகிறது

பர்மாவில் கம்யூனிஸ்டுகள் சரண்

ரங்கூன், நவ. 12—

பர்மாவில் காடுகளில் ஒளிந்து கொண்டு கொரில்லாப் போர் நடத்திக்கொண்டிருந்த கம்யூனிஸ்டுகள், வழக்கத்திற்கு மாறாக இன்று சரணடைந்துவிட்டதாக செய்திகள் தரப்படுகின்றன.

இதுகாறும் கம்யூனிஸ்டுக் கோட்டை எனக் கருதப்பட்டு, போர்க்களமாயிருந்த மத்திய பர்மாப் பிரதேசத்தைச் சேர்ந்த ப்யின்மனாவில், கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் துணைத் தலைவருடன் 103 பேர்கள், தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சரணடைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த நகரம் மாண்டலே செல்லும் வழியில் இரங்கூனுக்கு 250 மைல் வடக்கே இருக்கிறது என்றும், இங்கு கம்யூனிஸ்டுகள் சரணடைவது இராணுவத்திற்குப் பெரும் வெற்றி என்றும் கூறப்படுகிறது.

சரணடையும்போது அருகில் இருந்த மந்திரி தாகின்சான் மயிந் என்பார் 'ப்யின்மனா இதுவரை கம்யூனிஸ்டுக் கட்சியின் பிறப்பிடம்—கலகக்காரரின் பிறப்பிடம் என்று கூறப்பட்டுவந்தது; இனி சமாதானத்தின் பிறப்பிடம் என்று அழைக்கப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

வாக்குச் சீட்டில் குறி போடும் முறை

சென்னை சர்க்கார் சம்மதம்

சென்னை, நவ. 14—

வாக்குச் சீட்டில் குறிபோடும் முறைக்கு சென்னை அரசினர் ஒப்புதல் தெரிவித்திருக்கிறார்கள் என்றும், இந்தப் புதிய முறையை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் அதிகச் சங்கடமிருக்காது என்று தேர்தல் கமிஷனுக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் நேற்று சட்டசபையில் நிதியமைச்சர் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 14—11—57 வியாழன்

வெட்கப்படட்டும்!

ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சிமொழியாக டெல்லிப் பெரியவர்கள் திணித்துவரும் இந்தியின் இலட்சணத்தை பீகார் மாநில சர்க்காரைக் கேட்டால் தெரியும்.

பீகார், இந்தி வழங்கும் மாநிலங்களுள் ஒன்று ; அங்கு, ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியை ஆட்சிமொழியாக்கிவிட கடந்த ஏழாண்டுக் காலமாக முயற்சித்து வருகின்றது மாநில சர்க்கார். 1959-ம் ஆண்டு நவம்பர் திங்களுக்குள் இந்தியைக் கொண்டே நிர்வாகம் நடத்த வேண்டுமென்பது சட்டம்; ஆனால், அந்தச் சட்டப்படி, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் ஆட்சிமொழியாக இந்தியைத் தயாரித்துவிட முடியாது என்று கருதி, காலவரம்பை நீடிக்கக் கோரி திருத்தச் சட்டம் ஒன்று கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறது, பீகார் சர்க்கார். சட்டசபையில் பேசிய மாநில முதன் மந்திரி, காலக்கெடுவை மேலும் மூன்றாண்டுகளுக்கு நீடிக்கக்கோரி வாதாடுகையில், 'இந்தி ஆட்சிமொழியாகும் தகுதியை இன்னும் பெறவில்லை' என்று கூறியிருக்கிறார்.

இந்தி வழங்குகிற ஒரு மாநிலத்தின் நிர்வாகத்தை நடத்துவதற்கே ஏழாண்டுக்கால முயற்சிக்குப் பிறகும் முடியவில்லை. இன்னும் சில ஆண்டுகள் காலக்கெடுவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பீகார் மாநிலத்தில் நிர்வாகத்தை நடத்திச் செல்வோர்—மிகப் பெரும்பாலானோர் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களாகத்தான் இருப்பர். மாநிலத்தின் நிர்வாகக் காரியங்களும் இந்தி பேசும் மக்களுக்குத் தொடர்புடையனதான் ; என்றாலும், அந்த நிலையில்கூட, இந்தியை ஆட்சி மொழியாக்கிவிட முடியவில்லை. 'சட்டம் விதிக்கும் பத்தாண்டுகள் போதுமானதல்ல — மேலும் மூன்றாண்டுகள் வேண்டும்' என்று கேட்கப்படுகிறது.

இந்தி வழங்கும் ஒரு மாநிலத்தின் நிர்வாகத்தை நடத்திச் செல்லக்கூட போதுமானதாயில்லாத ஒரு மொழியைத்தான், இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஆட்சிமொழியாக்கிவிடத் துடிக்கின்றனர், டெல்லிப் பெரியவர்கள்!

இந்தியத் துணைக்கண்டத்து ஆட்சியின்கீழ் பணிபுரிவோர் மிகப் பெரும்பாலானோர் இந்தி தெரியாதவர்கள். இந்தி தெரிந்த பீகார் சர்க்கார் அதிகாரிகளாலும், ஊழியர்களாலுமே ஏழாண்டுக் கால முயற்சிக்குப் பிறகு ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டு இந்தியில் நிர்வாகத்தை நடத்த இயலவில்லை என்றால், இந்தியே தெரியாத இந்திய சர்க்கார் ஊழியர்களும், அதிகாரிகளும் இந்தியில் காரியம் பார்ப்பது எங்ஙனம்? தாய்மொழியாக இந்தியைக் கொண்டவர்களே அம்மொழியில் நிர்வாகம் நடத்தத் திறன் பெறுவதற்குப் பதின்மூன்றாண்டுக் காலம் வேண்டுமெனத் தெரியவந்திருக்கையில், இந்திக்கும் தங்கள் தாய்மொழிக்கும் 'சகவாசதோஷம்' கூட இல்லாதவர்களால் இந்தியைக் கற்றுக்கொண்டு அதில் நிர்வாகம் பார்க்க, தாராளம் எனக் கருதி சில பெரியவர்கள் கூறும் நூறாண்டுக் காலம்கூட போதுமானதாயிருக்க முடியாதே!

மேலும், பீகார் சர்க்கார் நிர்வாகம் எல்லாம், இந்தி தெரிந்த அந்த மாநில மக்களைப் பொறுத்த விவகாரங்களில் தான்; ஆனால் இந்திய சர்க்காரின் நிர்வாகம், பெரும்பாலும் இந்தியே தெரியாத மக்களுடன் தான். இந்தி தெரிந்த மக்களுடன் ஒரு சர்க்கார் அதே மொழியில் தொடர்பு கொள்வதே கஷ்டமானதாயிருக்கிறது; அப்படித் தொடர்பு கொள்ளுகிற அளவுக்கு இந்தி இன்னும் வளம் பெறவில்லை என்று கூறப்படும்போது, இந்தியே தெரியாத மக்களுடன், ஒரு சர்க்கார் எப்படி இந்தியில் தொடர்புகொள்ளுவது சாத்தியமாக முடியும்?

மேலும், மாநில நிர்வாகத்தைப் பொறுத்து ஒரு சர்க்காரின் வேலைகளின் அளவும், முக்கியத்துவமும், டில்லி சர்க்காருடைய வேலைகளோடு ஒப்பிடுகையில் குறைவானவைதான்.

ஒரு மாநில சர்க்காரின் குறைந்த அளவு முக்கியத்துவமுடைய வேலைகளைக் கவனிப்பதற்கே இந்தி மொழி இன்னும் தகுதி பெறவில்லை என்றால், ஒரு துணைக்கண்டத்து ஆட்சியின் அளவும் முக்கியத்துவமும் மிகுந்த வேலைகளைக் கவனிப்பதற்கு இந்தி எப்படித் தகுதி பெற்றதாகிவிடும்?

ஆங்கில மொழியிலிருந்து, நிர்வாகத்திற்குத் தேவைப்படுகிற சில நூறு சொற்களை மொழி பெயர்த்து அகராதி வெளியிட்டுவிடுவதினாலேயே இந்தி வளம் பெற்றுவிடும் என்றோ, ஆட்சிமொழியாகும் தகுதி பெற்றுவிடும் என்றோ எந்தப் புத்திசாலியும் கூறமாட்டான்.

பீகாரிலேயே ஆட்சிமொழியாக இன்னும் தகுதிபெறாத ஒரு மொழியை, இந்தியத் துணைக்கண்டம் முழுவதற்கும் ஆட்சிமொழி ஆக்கத் திட்டமிட்டுத் துடிப்புக் காட்டுகிற இந்தி வெறியர்கள் ஒருமுறை, வெளிப்படையாக இல்லாவிடினும் உள்ளூரவேனும் வெட்கப்படட்டும்.

இந்த அவலட்சணமான நிலையிலிருக்கும் ஒரு மொழியினை, 'இந்தியா' என்ற அரசியல் அமைப்பில் பிணைக்கப்பட்டிருக்கும் ஒரே பாவத்திற்காக உயர்தனிச் செம்மொழிகளைக் கொண்ட தென்னாட்டவர் ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று எதிர் பார்க்கிறார்களா?

இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்

இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் முன்னேறி வருகிறதாம்! முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 21 கிராமந்தர 'கிளினிக்'குகளும், 126 நகர 'கிளினிக்'குகளும் பல்வேறு மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்டனவாம்!

இரண்டாவது திட்ட காலத்தில் செப்டம்பர் இறுதி வரை பல மாநிலங்களிலும் 86 கிராம 'கிளினிக்'களும், 126 நகர கிளினிக்'களும் ஏற்படுத்தப்பட்டுள்ளனவாம்.

கன்னடத் தலைநகரில் தமிழ் விழா

பொதுச்செயலாளர் கலந்து கொண்டு சிறப்பித்தார்

மற்றும் முன்னணி வீரர்கள் பலரும் கலந்துகொண்டனர்

கன்னடத் தலைநகரான பெங்களூரில் தமிழ் விழா ஒன்று கடந்த ஞாயிறன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அந்த விழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.

புத்தண்ண செட்டி மண்டபத்தில் நடைபெற்ற அந்த கோலாகலமான விழாவில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மற்றும் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், டி. கே. சீனிவாசன், கண்ணதாசன், ஆர்.எஸ். பாண்டியன் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

விழா

10—11—57 அன்று புத்தண்ணசெட்டி மண்டபம் கழகக் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது; மண்டபத்தின் உள்ளும்புறமும் தமிழர் நிரம்பவழிந்தனர்.

சிவாஜி நகர திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இவ்விழாவினை ஏற்பாடு செய்து வெற்றி கண்டனர்.

காலை 10 மணி அளவில், அசோகன் குழுவினரின் வில்லுப் பாட்டு நிகழ்ச்சி துவங்கி 11 மணி வரை நடைபெற்றது.

பின் பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் எஸ். வி. பதி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் விழாவின் நோக்கத்தை விளக்கினார். அவர் விழாவினைத் துவக்கிவைக்குமாறு திருமதி ஜகதீசுவரி அம்மையார் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

திருமதி ஜகதீசுவரி அவர்கள் விழாவினை ஏற்பாடு செய்தவர்களைப் பாராட்டிவிட்டு, தமிழ் மொழியின் சிறப்புகள் குறித்தும், அதன் இலக்கியவளம் குறித்தும் எடுத்துரைத்து, தமிழினைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் பெருமைக்குரியவர்கள் என்றும் குறிப்பிட்டுவிட்டு, தமிழ் விழா வெற்றிபெற வாழ்த்தினார்கள்.

அடுத்து தோழர் பதி அவர்கள் முன்மொழிய, உசேன் அவர்கள் வழிமொழிய விழாவிற்கு டாக்டர் வேதநாயகம் அவர்கள் தலைமை ஏற்றார்கள்.

அவர் தனது தலைமையுரையில், தமிழ் மொழி சிறப்புக்குரியது என்பதை இனியும் நாம் பேசித் தெரிந்து கொள்ளவேண்டியதில்லை என்றும், தமிழ் மொழிக்கு வந்துள்ள ஆபத்துபற்றி எண்ணிப் பார்த்து உருவான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், இந்தியைக் கண்டித்தும் பேசினார்கள்.

பின்னர் தோழர் ஆர். எஸ் பாண்டியன் அவர்கள் பேசுகையில், கன்னட நாட்டில் தமிழ் விழா நடைபெறுவது பெருமைப்படுதற்குரியது என்றும், தமிழ் மொழிக்கு வந்துள்ள ஆபத்து இந்தித் திணிப்பு என்றும், வடவர் தமது ஏகாதிபத்திய நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளவே சட்டவாம்புகளையும் மீறி இந்தித் திணிப்பைத் தீவிரப்படுத்தி வருகின்றனர் என்றும் குறிப்பிட்டார்

அத்துடன் பகல் 1-30 மணி அளவில் முற்பகல் நிகழ்ச்சி முடிவுற்றது.

மாலை நிகழ்ச்சிகள்

மாலை விழா மீண்டும் 3-30 மணிக்குத் துவங்கியது.

சேலம் நித்தியானந்தம் குழுவினரின் இசை அரங்கு அரை மணிநேரம் நடைபெற்றது.

அடுத்து, டி. கே. சீனிவாசன் அவர்கள் பேசுகையில், 'கன்னடத்தில் தமிழ் விழா நடைபெறுவது, தங்கை வீட்டில் தமக்கைக்கு விழா நடத்துவது போலாகும். தமிழ் தமக்கை — கன்னடம், தங்கை என்பதால், தமக்கை தமிழுக்கு-தங்கை கன்னடத்தின் வீட்டில் விழா நடைபெறுவது, தங்கைக்குப் பெருமையும் மகிழ்ச்சியும் தருவதாகும். அதே போல, தங்கைக்கும் ஏதாவது விழா நடைபெற்றால் தமக்கை மகிழாமலிருக்கமுடியாது' என்று குறிப்பிட்டு, தமிழ்மொழி வளர்த்த பண்பினையும் நாகரீகத்தையும் குறிப்பிட்டு, இடைக்காலத்தில் தமிழுக்கு நேர்ந்துற்ற இடுக்கண்களை அடுக்கிக்காட்டி, பின், தமிழ் வளர கழகம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் வெற்றி பெற்று வருவதையும் எடுத்துரைத்தார்.

பின்னர் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் பேசுகையில், தமிழரின் பண்பாட்டுப் பெருமைகளை உணர்த்தினர். இன்று தமிழர்கள் தங்களது பெருமைக்குரிய பண்பையும், நாகரீகத்தையும் வரலாற்றினையும் மறந்திருப்பதை எடுத்துரைத்து, தமிழ் மக்கள் தாங்கள் இழந்துவிட்ட வாழ்வை மீண்டும் பெற தங்களின் கடந்த காலப் பெருமையை எண்ணிப்பார்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அடுத்தாற்போல் தோழர் கண்ணதாசன் அவர்கள் பேசுகையில், '500 ஆண்டுகளுக்கு முன் தான் கண்டுபிடிக்கப்பட்டது அமெரிக்கா; ஆனால் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழில் தொல்காப்பியம் இயற்றப்பட்டது; அமெரிக்கா இன்று உலகை விலைக்கு வாங்கிவிடமுடியும் என்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறது; ஆனால் தமிழகம் வடவர் பிடியில் சிக்கி வாழ்விழந்து தவிக்கிறது; என்?'—என்று எண்ணிப் பார்க்குமாறு தமிழர்களை அறைகூவி அழைத்தார்.

இறுதியாக தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அரியதோர் தமிழ் முழக்கம் செய்தார்கள்.

"தமிழ் விழாக் கொண்டாடுவதின் நோக்கம், தமிழின் இறந்தகாலப் பெருமைகளை எண்ணிப் பார்க்கவும், அப்படிப் பார்க்கும்போது நிகழ் காலச் சீர்கேட்டை உணரவும், எதிர்காலத்தை எப்படிச் சிறப்பாக்குவது என்பதைச் சிந்திக்கவும்தான்; ஒரு காலத்தில் ஓங்குபுகழோடு வாழ்ந்த தமிழன், இன்று வீழ்ந்து கிடக்கிறான்; மீண்டும் அவன் எழுச்சி பெற இதுபோல தமிழ் விழாக்கள் பயன்படும். கடந்த காலப் புகழைப் பேசிக் கொண்டிருப்பதாலேயே பயன் என்ன என்று சிலர் கேட்கலாம். கடந்த காலத்தைப் பற்றிப் பேசுவதினாலும் பயன் உண்டு என்பதை உணர வேண்டும்" என்று குறிப்பிட்ட பொதுச்செயலாளர் அவர்கள், தமிழ், எப்படி இயற்கையோடு இயைந்து வளர்ந்து சிறப்புப் பெற்ற மொழி என்பதையும், அதன் இலக்கிய வளங்களையும் எடுத்துரைத்து, தமிழ்மொழிக்கு வந்துள்ள ஆபத்து பற்றி எச்சரிக்கை தந்து, தமிழைக் காக்கவும், தாயகம் மீட்கவும் தமிழர்—தென்னவர் தயாராக வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். விழாவில் அப்பாதுரையார் நிதிக்கு ரூ. 139—11—6 வசூலாயிற்று.

தோழர் பதி நன்றி நவில, தலைவர் முடிவுரையுடன் விழா இனிது முடிவுற்றது. (ந. நி.)

சட்டமன்றக் கூட்டம் உதகையில் நடைபெறுமா?

சர்க்கார் நிலை பற்றி நிதி அமைச்சர் விளக்கம்

கோடைக்காலத்தில் சீமான்கள் சுக வாழ்வு நடத்தும் உதகையில் ஒரு மாளிகையை வாங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

"சட்டமன்றக் கூட்டங்களை அங்கு நடத்துவது அவசியமா? அந்த மாளிகையின் மதிப்பீட்டை, நமது அரசாங்கப் பொறியியல் நிபுணர் எந்த அளவுக்கு நிர்ணயித்துள்ளார்?" என்று தோழர் எம். பி. சுப்பிரமணியம் கேட்டார்.

"இந்த மன்றம் விரும்பினால் அங்கு நடத்தலாம்—இல்லாத நிலையில் இப்போது வாடகை தரப்பட்டுவரும் சில அரசாங்க அலுவலகங்கள் அங்கு மாற்றப்படலாம்" என்று அமைச்சர் பதிலளித்தார்.

தென்னாப்பிரிக்காவில் இந்திய வம்சாவழியினர்

நடத்தப்படும் விதம்குறித்து பேச்சுவார்த்தை

தென்னாப்பிரிக்காவில் இந்திய வம்சாவழியினர் நடத்தப்படும் விதம்குறித்து தென்னாப்பிரிக்க சர்க்காருடன் இந்தியா, மற்றும் பாகிஸ்தான் பேச்சுவார்த்தை நடத்தும்போது சுவிட்சர்லாந்து பார்வையாளராக இருக்கவேண்டுமென ஐ. நா.-வில் பெரு நாட்டுப் பிரதிநிதி இன்று ஒரு யோசனை கூறினார்.

குடி தண்ணீருக்கும் கஷ்டப்படுகின்றனர்

'கிணறுகள் வெட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா?'

ஏ. கோவிந்தசாமி கேள்வி— அமைச்சர் பதில்

சென்னை, நவ. 12—

தென்காசி பகுதியில் மட்டும் கிணறு வெட்ட 1,791 கடன் மனுக்கள் வந்துள்ளன என்றும் அதில் 367 மனுக்கள் மட்டுமே கவனிக்கப்பட்டன என்றும், சங்கரன்கோயில் பகுதியில் 1,625 மனுக்களில் 825 மனுக்கள் மட்டும் கவனிக்கப்பட்டன என்றும் அமைச்சர் மாணிக்கவேலர் சட்டமன்றத்தில் கூறினர்.

"கடந்த 13 ஆண்டுகளாக மழை இல்லாத காரணத்தினால் இந்தப் பகுதியில் குடி தண்ணீருக்குக்கூட கஷ்டப்படுகின்றனர் மக்கள் என்பதை உணர்ந்து, கிணறுகள் வெட்ட அரசாங்கம் முன்வருமா?" என்று, தோழர் ஏ. கோவிந்சாமி கேட்டார்.

அரசாங்கம் கவனித்துவருவதாக அமைச்சர் கூறினர்.

கே. எஸ். பாண்டியன் நினைவு நாள் பொதுக்கூட்டம்

அண்ணா கலந்து கொண்டார்

சென்னை, நவ. 11—

கே. எஸ். பாண்டியன் நினைவு நாளை யொட்டி, சென்னை 3-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் சார்பில், 10—11—57 மாலை, இராபின்சன் பூங்கா திடலில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ஏராளமான மின்ஒளி விளக்குகளாலும், இருவண்ணக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையில் சுமார் ஆறடி உயரமுள்ள கே. எஸ். பாண்டியனின் திருஉருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. மழை பெய்துகொண்டிருந்தும் ஏராளமான மக்கள் அண்ணாவருகையை எதிர்பார்த்து ஆவலுடன் கூடியிருந்தனர். அண்ணா அவர்கள் மேடைக்கு வந்தபோது மக்கள் ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

டேப்-இராதாமாணிக்கம் இன்னிசைக்குப் பிறகு கூட்டம் 6-30 மணிக்குத் துவங்கியது. தோழர். பி. ஏ. ஆறுமுகம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

மாணவன் எம். சத்தியநாதன், மாணவி எஸ். பி. சற்குணம் ஆகியோர் பேசியபின், கையொலி ஆரவாரத்துக்கிடையே அண்ணா அவர்கள் பேச எழுந்தார்கள்.

அண்ணா அவர்களுக்கு, 2-வது வட்ட தி. மு. க. கிளை, 3-வது வட்ட தி. மு. க. கிளை, 3-வது வட்ட தாளமுத்து-நடராசன் நினைவுப் படிப்பகம், தென்றல் நாடக மன்றம், 3-வது வட்ட கே. எஸ். பாண்டியன் படிப்பகம், 4-வது வட்ட கே. எஸ். பாண்டியன் படிப்பகம், 4-வது வட்ட நாவலர் படிப்பகம், நியூபேன்சி தையற்கடை, வடசென்னை கைவண்டித் தொழிலாளர்கள், கோணி தைக்கும் தொழிலாளர்கள், வடசென்னை லாரி வேலை செய்யும் தொழிலாளர்கள், வண்ணை ரூபி சோடா கம்பெனி தொழிலாளர்கள், வண்ணை சுழல் மெத்தை — தண்ணீர்தொட்டி ரிக்ஷா வண்டித் தொழிலாளர்கள், வடசென்னை சோடா கம்பெனித் தொழிலாளர் சங்கம், விம்கோ சோடா கம்பெனி, வடசென்னை மகளிர் மன்றம், குமரன் சவுண்ட் சர்வீஸ், 4-வது வட்ட பொதுநல சங்கம் ஆகியோர் சார்பில் மலர்மாலைகளும் கைத்தறித்துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

அண்ணா அவர்கள் சுமார் 3/4 மணிநேரம் பேசினார்கள்.

கடுமையான மழை வந்ததால் அத்துடன் பேச்சை முடித்துக் கொண்டார்கள். நன்றிகூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

சென்னை — கோமளீசுவரன்பேட்டை மறுமலர்ச்சி மன்றத் துவக்க விழா

அண்ணா, க. அன்பழகன், ஏ. கோவிந்தசாமி கலந்துகொண்டனர்

சென்னை, நவ. 10—

சென்னை — கோமளீசுவரன் பேட்டை மறுமலர்ச்சி மன்றத் துவக்க விழா, 8—11—57 மாலை பச்சையப்ப முதலித் தெருவில் அழகுற அமைக்கப்பட்டிருந்த மேடையில் சிறப்புற நடைபெற்றது.

டேப் இராதாமாணிக்கம் இன்னிசையுடன் பொதுக்கூட்டம் துவங்கியது.

தோழர் எம். எஸ். அப்துல் காதர் தலைமை வகித்தார்.

தலைமையுரைக்குப்பின் தோழர் கே. எஸ். புகாரி சிறிது நேரம் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்.

அடுத்து தோழர் கரிகாலன், இன்றைய ஆட்சியாளரின் போக்கை விவரித்து, உணவுத் துறையில் மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் கடைப்பிடிக்கும் செயல்களை வன்மையாகக் கண்டித்தார்.

பிறகு, தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கியும், இந்தித் திணிப்பைக் கண்டித்தும் உரையாற்றிவிட்டு, கலைவாணர் என். எஸ். கே. படிப்பகத்தைத் திறந்துவைத்தார்.

அடுத்து தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் சட்டசபை நிகழ்ச்சிகளை விளக்கிச் சிறிது நேரம் பேசினார்.

இறுதியாக அண்ணா அவர்கள் பேச எழுந்தார்கள்.

அண்ணா அவர்களுக்கும், தோழர்கள் க. அன்பழகன், ஏ. கோவிந்தசாமி ஆகியோருக்கும் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

தோழர் கோவிந்தராசு அவர்களின் பெண் மகவுக்கு அண்ணா அவர்களால் 'தமிழ்ச் செல்வி' எனப் பெயரிடப்பட்டது.

அண்ணா அவர்களுக்கு, மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில் ஓர் கம்பளித் துண்டும், கீதா ஓட்டல் தொழிலாளர்கள் சார்பில் மாலையும், மற்றும் பலர் சார்பில் கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

அண்ணா பேசி முடித்த பின், நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை நினைவு நாள்

வெற்றிச்செல்வி - அன்பழகன் சொற்பொழிவு

9—11—57 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு சென்னை மணவழகர் மன்றச் சார்பில் மன்ற நிலையத்தில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை நினைவு நாள் தோழியர் வெற்றிச்செல்வி-அன்பழகன் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

துவக்கத்தில் டாக்டர் சி. நடேசனார் இரவு பாடசாலை மாணவிகள் தமிழ் வணக்கம் கூறினர். பின்னர், சிறுமி பொற்செல்வி இசைபாட அ. செந்தாமரை, அ. மனமல்லி முதலிய சிறுமிகள் நடனம் ஆடினர்.

தலைமை தாங்கிய வெற்றிச்செல்வி-அன்பழகன் தன் தலைமை உரையில் குறிப்பிட்டதாவது :—

"பேராசிரியர் சுந்தரம்பிள்ளை திருவிதாங்கூர் ஆலப்புழையில் பிறந்து வளர்ந்து, எம். ஏ. பட்டம் பெற்று, திருவிதாங்கூர் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராய் அமர்ந்து. தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கி, தமிழ் மொழியில் நாடகக் காப்பியம் இல்லாத குறையைப் போக்க 'மனோன்மணீயம்' என்னும் சிறந்த காப்பியத்தை இயற்றினார். தமிழின் சிறப்பையும், தமிழரின் பண்பையும் விளக்கி பல ஆங்கிலக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார்.

"மேலும் அவர், பிற மொழி ஆதிக்கத்ததால் தமிழ் சிதைந்து

(4-ம் பக்கம் பார்க்க)

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம்

முதலமைச்சர் திறந்து வைத்தார்

கிருஷ்ணகிரி, நவ. 10—

சேலம் மாவட்டம் கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தை இன்று காலை சென்னை மாநில முதலமைச்சர் காமராசர் திறந்து வைத்தார்; மராமத்திலாகா அமைச்சர் கக்கன் தலைமை தாங்கினார்.

சென்னை மராமத்திலாகா நீர்ப்பாசன பிரதம எஞ்சினியர் யு. ஆனந்தராவ் தன்னுடைய அறிக்கையில் கூறியதாவது :—

"பொன்னியாற்றின் குறுக்கே கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம் கட்டப்பட்டுள்ளது. இதன் நீளம் 3,250 அடி; இதில் சுமார் 910 அடி நீளம் கற்களால் கட்டப்பட்டுள்ளது; மீதி, மண்ணால் கட்டப்பட்டது. இந்தத் திட்டத்தினால் 9,000 ஏக்கர் நிலம் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"இந்த நீர்த் தேக்கத்தில் 241 கோடி கன அடி தண்ணீர் தேங்கும்; நீர்த் தேக்கத்தின் உயரம் 75 அடி (தற்பொழுது 46 அடி தண்ணீர் உள்ளது).

"இந்த நீர்த் தேக்கத்தை 2 கோடி 2 இலட்சம் ரூபாயில் 4 ஆண்டுக்காலத்தில் கட்டத் திட்டமிடப்பட்டதை சுமார் ஒரு கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் (திட்டமிடப்பட்டதை விட ரூ. 30 இலட்சம் குறைவாக) இரண்டரை ஆண்டுக்காலத்திலேயே கட்டி முடிக்கப்பட்டது.

விழாவிற்குத் தலைமை வகித்த அமைச்சர் கக்கன் குறிப்பிட்டதாவது :—

"கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம் போல் பல நீர்த்தேக்கங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன. இந்த நீர்த் தேக்கத்தை, குறிப்பிட்ட காலத்தைவிட சீக்கிரமாக — குறைவான செலவில் கட்டிமுடித்ததற்காக எஞ்சினீயர்களைப் பாராட்டுகிறேன். இந்த நீர்த்தேக்கத்தில் தினம் 5 ஆயிரம் பேர் கூலி வேலை செய்தார்கள். அவர்களுக்கு சுமார் ரூ. 30 இலட்சம் வரை கூலியாகக் கொடுக்கப்பட்டுள்ளது"

நீர்த் தேக்கத்தைத் துவக்கி வைத்துவிட்டு சென்னை முதலமைச்சர் காமராசர் குறிப்பிட்டதாவது :—

"சென்னை எஞ்சினீயர்கள் மிக்கத் திறமைசாலிகள்; இரண்டரை ஆண்டுக்காலத்தில் 30 இலட்ச ரூபாய் குறைவான செலவில் இந்த நீர்த்தேக்கத்தைக் கட்டியிருக்கிறார்கள்.

"ஆந்திரா, கேரளம் ஆகிய மாநிலங்களில் மீதமாகும் (உபரி) தண்ணீரை நமக்குக் கொடுத்து உதவுமாறு கேட்டு வருகிறோம்; அந்த முயற்சி வெற்றியாகும் என நம்புகிறேன்.

"சென்னை மாநிலத்தில் உணவுப் பற்றாக்குறை உள்ளது; இக்குறையை நீக்க இம்மாதிரி நீர்த் தேக்கங்கள் தேவைப்படுகின்றன. இம்மாதிரி சிறிய நீர்த்தேக்கங்களை ஆங்காங்கே கட்டினால்தான் ஐந்தாண்டுத் திட்டத்தின் பலனை எல்லாப் பகுதி மக்களும் அடையமுடியும். பெரிய அணைக்கட்டுகளை மட்டும் கட்டிப் பயனில்லை. 'கடன் வாங்கியும் பட்டினியா?' என்று சொல்வது போல், நாடு சுதந்தரமடைந்த பிறகும் மக்கள் பட்டினி கிடக்கக் கூடாது என்பதற்காக இம்மாதிரி நீர்த்தேக்கங்களைக் கட்டி உணவுப் பற்றாக்குறையை நீக்கப்பாடுபடுகிறோம்.

"இம்மாதிரி நீர்த்தேக்கங்கள் கட்டப்படுவதால் உழைப்பாளிகளுக்கு மட்டுமின்றி படித்த பலருக்கும் வேலை கிடைக்கிறது."

கேரளத்திற்கு டெல்லி தரும் உதவி!

புதுடில்லி, நவ. 12—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், கேரளத்தின் வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்கு இந்திய சர்க்கார் ரூ. 1-கோடி ஒதுக்கியிருக்கிறது.

வடசென்னை தேர்தல் வழக்கு நிதி சிறப்புக்கூட்டம்

ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கண்ணதாசன், எம். ஜி. இராமச்சந்திரன், அறிவழகன் கலந்துகொண்டனர்

சென்னை, நவ. 10—

வடசென்னை தேர்தல் வழக்கு நிதிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'சிறப்புக் கூட்டம்' நேற்று மாலை 7 மணிக்கு கோகலே மண்டபத்தில் துவங்கியது.

கூட்டத்திற்குத் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ. தலைமைவகித்தார்.

தோழர்கள் கண்ணதாசன், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், க. அறிவழகன் ஆகியோர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்தில், நுழைவுக் கட்டணம் மூலம் ரூ. 420 வசூலாயிற்று; கூட்டத்திற்கான செலவுபோக மீதி 250 ரூபாயைத் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தோழர் என். சிவரத்தினம் அவர்களிடத்தில் அளித்துவிட்டு, மேலும் தோழர் எம். ஜி. ஆர். அவர்கள் தன் சொந்தப் பொறுப்பில் ரூ. 250 அளிப்பதாக அறிவித்தார்.

தலைவர், தம் முன்னுரையில், தென்னாட்டின் நலனுக்கெனப் பாடுபடும் தனிப் பெரும் கட்சி தி. மு. கழகம்தான் என்றும், காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடக்கூடிய ஆற்றல் அது ஒன்றுக்குத்தான் உண்டு என்றும், சட்டசபையில் இன்றைக்கு உண்மையான எதிர்க்கட்சியாக இயங்குவதும் தி. மு. கழகம்தான் என்றும் தக்க சான்றுகளுடன் விளக்கினார்.

அவர் மேலும் பேசுகையில், ஒரு கட்சியின் ஆற்றலை அளந்து மதிப்பிடுவதற்கு இரண்டே கருவிகள்தான் உண்டு என்றும், ஒன்று போராட்டம்—மற்றொன்று தேர்தல் என்றும், இன்றைய அரசியல் சூழ்நிலையில் தேர்தலைக்கொண்டு மதிப்பிட முடியாத நிலைமை இருந்துவருகிறது என்றும், இதற்குக் காரணம், மக்கள் ஓட்டுரிமையை நல்லமுறையில் பயன்படுத்தக்கூடிய தெளிவு பெறவில்லையென்றும், காசுக்கு ஓட்டை விற்கும் நிலை மாறினால்தான் உண்மையான தேர்தலாக இருக்கும் என்றும் கூறினார்.

இந்த நாட்டிலுள்ள வறுமையைப் பயன்படுத்திக்கொண்டு பணம் கொடுத்து ஓட்டுப் பெற்று பலர் பதவிக்கு வந்துவிடுகிறார்கள் என்றும் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தேர்தலுக்குப்பிறகு நமது கழகத்துக்கு ஒரு தனி மதிப்பும், செல்வாக்கும், இந்தியா முழுவதிலும் ஏற்பட்டிருக்கிறது என்றும், நேற்றுவரை எதிர்த்தவர்களெல்லாம் இன்று நம்மை ஆதரிக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதென்றும் கூறி, யார்யார் என்ன துவேஷப் பிரச்சாரம் செய்தாலும் அதைப் பொருட்படுத்தாமல், நம் இலட்சியம் வளர நாம் பாடுபட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

அடுத்து தோழர் க. அறிவழகன் பேசுகையில், வடநாட்டு ஆதிக்கவெறியர்கள் தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்கும் போக்கைக் கண்டித்தும், இந்த நாட்டில் எந்தெந்தமுறையில் இந்தி புகுத்தப்படுகிறது என்பதை விளக்கியும், இந்தியாவில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் இந்திக்கு செல்வாக்குத் தேடும் நேரு சர்க்காரின் போக்கை பல உதாரணங்களுடன் எடுத்துக்காட்டியும் விளக்கினார்.

அடுத்து தோழர் கண்ணதாசன் பேசுகையில், நமது கழகத்தின் பொருளாதார இலட்சியத்தை விளக்கினார். 'இறுதியில் அண்ணாவின் தத்துவமே வெல்லும்' என்று கூறினார்.

இறுதியாகத் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் பேசுகையில், இந்தியைப் புகுத்துவதற்கு டெல்லி அரசாங்கம் செய்யும் பல விதத் தந்திரங்களில் நாணயத்தில் புகுத்தியது மிகவும் முக்கியமானது என்று கூறினார்.

"நாம் எதைப் புறக்கணித்தாலும் காசு பணத்தைப் புறக்கணிக்க முடியாத நிலையிலிருக்கிறோம்; இதையறிந்துதான், அன்றாடம் புழங்கிவருகிற காசை 'நயா பைசா' என்று அழைக்குமாறு செய்துவிட்டார்கள்" என்றும் கூறினார்.

இந்தியை எதிர்ப்பதில் உள்ள சிக்கலான நிலைமையையும் சுட்டிக்காட்டினார். பசி, பட்டினி, வறுமையைக் காட்டிப் போராடும்படி மக்களைத் தூண்டுவது எளிது என்றும், ஆனால், தாய்மொழிக்கு ஏற்பட்டுள்ள இழிவையும், நாட்டு விடுதலையின் அவசியத்தையும் பாமர மக்களிடம் எடுத்துக் கூறி போராடத் தூண்டுவது அவ்வளவு எளிதான காரியமல்லவென்றும், எல்லா மக்களுக்கும் மொழியுணர்ச்சி ஏற்படவேண்டும் என்றும், இந்தியை எதிர்த்துப் போராட நம் கழகத்தைத் தவிர வேறு எவரும் ஆற்றல் பெற்றவர்களாக இல்லை என்பதையும் சுட்டிக்காட்டி விளக்கினார்.

தி. மு. கழகத்திடம் தாம் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையைத் தெரிவித்து 'இறுதிவரை தி. மு. கழக உறுப்பினனாகவே இருப்பேன்' என்று கூறியதுடன் விரைவில் நடிப்புத் துறையிலிருந்து விலகிவிடப் போவதாகவும், இதற்குக் காரணம் '24 மணிநேரமும் கட்சிக்கு உழைக்க வேண்டும்' என்ற தனது நெடுநாள் அவாவே என்றும் குறிப்பிட்டார்.

தான் இதுவரை நடிப்புத் துறையில் நீடித்ததற்குக் காரணம், அந்த இடத்தில் மொழி — இனப் பற்றில்லாத—தமிழினத்துக்குத் துரோகம் செய்யக் கூடிய வேறு எவரும் இடம் பெற்றுவிடக்கூடாது என்பதுதான் என்றும் கூறினார்.

இறுதியாக, தோழர் என். சிவரத்தினம் எல்லோருக்கும் நன்றி தெரிவித்தார்.

மறைவு

ஒரத்தநாடு தி. மு. க. செயலாளர் தோழர் சா. கோவிந்தன் அவர்களது தந்தையார் திரு. வி. சாரங்கபாணி (பிள்ளை) அவர்கள் 31—10—57-ல் இயற்கையெய்தியது குறித்து தி. மு. க. சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

* * *

கடையநல்லூர் தி. மு. கழக உறுப்பினரும் கழக வளர்ச்சிக்காக உழைத்துவந்தவருமான தோழர் வே. வெள்ளையப்பன் அவர்கள் 30—10—57-ல் இயற்கையெய்தியமைக்கு நகர தி. மு. கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

* * *

நமது இயக்கத் தோழரும், சென்னை 4-வது வட்டம் சோலையப்பன் தெருவிலுள்ள பொதுநல சீர்திருத்த மன்றத்தின் செயலாளருமான, தோழர் நடராசன் அவர்களின் கோபி என்ற மூன்று வயது மகன் இயற்கையெய்தியமை குறித்து வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

முகவரி மாற்றம்

தில்லை-வில்லாளன்,
72-73 கடைத்தெரு,
சிதம்பரம்

கல்லூரிகளில் போதனா மொழியாகத் தமிழ்

சர்க்கார் மேற்கொண்டுள்ள நடவடிக்கை பற்றி கல்வி மந்திரி

சென்னை, நவ. 13—

பல்கலைக் கழக மட்டத்தில் உயர்தரக் கல்வி போதனை தமிழில் நடைபெறுவதற்கு புத்தகங்கள் இல்லாதிருக்கும் குறையைப் போக்க, தான் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகக் கல்வி மந்திரி சுப்பிரமணியம், மேல் (சட்ட) சபையில் தெரிவித்திருக்கிறார்.

நிபுணர் குழுவைக்கூட ஆலோசியாமல், தான் பாடப் புத்தகங்களுக்கான 20 துறைகளைத் தேர்ந்தெடுத்துள்ளதாகவும், அவற்றில் பாடப் புத்தகங்களும் தயாரிக்குமாறு பண்டிதர்களையும், புலவர்களையும் கேட்டிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

ஒவ்வொன்றிலும், மூன்று அல்லது நான்கு பேருடைய புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்படும் என்றும், புத்தகம் எழுதும் ஆசிரியர்களுக்கு ரூ. 1,500 முதல் ரூ. 5,000 வரை தர ஏற்பாடாகியுள்ளது என்றும், சர்க்கார் இந்தப் புத்தகங்களை வெளியிடும் என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

காங்கிரசின் கண்ணியம் இதுதானா?

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தீ வைத்தவர்கள், பிறகு, அவர்களே, மாலையிட்டு எங்களை வரவேற்கும் நிலைக்கு வந்துள்ளனர். இன்று இங்கு தாக்கியவர்களும், நாளை, தவறை உணர்ந்து மன்னிப்புக்கேட்கும் நாள்வரும். 9 ஆண்டுகளுக்கு முன்பு காங்கிரசில் இருந்துகொண்டு எங்களை ஏசியவர்கள், தேர்தல் காலத்தில் தி. மு. க.-வாக மாறி, என்னை ஆதரித்தனர்.

"அரசியல் கோழைத்தனம் எங்களுக்கில்லை; யாருடைய பேச்சானாலும் அதனைக் கேட்டுச் சிந்திக்கவேண்டும் என்று பேசும் பண்புடையவர்கள் நாங்கள்! யாருடைய பேச்சையும் கேட்கக் கூடாது என்ற கோழைத்தனம் உடையவர்களல்ல நாம்! இடம், மின்சாரம் கொடுக்க மறுக்கும் அரசியல் கண்ணியம், நாகரீக மற்ற செயல்கொண்டவர்கள் அல்லர்! யார் பேசினாலும் கேளுங்கள்—சிந்தியுங்கள்; 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'—என்ற வள்ளுவர் கொள்கையைக் கடைப்பிடிப்பவர்கள்! சத்தியம், அகிம்சை என்று போதித்த காந்தியாரின் பெயரைக் கூறிக்கொண்டு இரத்தம் கொட்டும் அளவுக்கு வெறிச் செயலை மேற்கொள்ளும் இழி தன்மைகொண்டவர்கள் அல்லர்! மற்றவர்களது கூட்டத்தைத் தடுத்துக் கலவரம் செய்யும் இழி செயல் கொண்டவர்கள் அல்லர்! அரசியலில் நேர்மை—கண்ணியம்—நாணயம் முதலிய பண்பாடு உடையவர்கள்! நாங்கள் எங்களது கொள்கைகளை அடித்தோ, மிரட்டியோ, கட்டாயப்படுத்தியோ புகுத்தும் நோக்கம் கொண்டவர்கள் அல்லர்!

"அரைக்கும் சந்தனம் மணக்கும்; பொசுக்குகின்ற தங்கம் மின்னும்; காய்ச்சும் பால் இனிக்கும்; அடிக்கப்படுகின்ற பந்து உயரும்; அதேபோல், தாக்கப்படுகிற தி. மு. கழகம் வளரும்!

"எங்களது கொள்கை பிடிக்கவில்லையென்றால், மீண்டும் இதே இடத்தில் ஒரு கூட்டம் போட்டு, நாங்கள் கூறியவற்றை மறுத்துப் பேசட்டும்; மக்கள், அவர்களது வாதத்தைக் கேட்டு தீர்ப்புக் கூறட்டும்.

"தோழர் சகாதனை அடித்துவிட்டதாலேயே கழகத்தை அழித்துவிட முடியாது. 'அவர்கள் அடித்தபொழுது நீங்கள் என்ன செய்தீர்கள்?' என்று கேட்டேன்; 'திருப்பி அடித்தீர்களா' என்று வினவினேன்; அதற்கு அவர், 'நான் சும்மா இருந்தேன்' என்று சொன்னார்; அதனைக் கேட்டு நான் மகிழ்ச்சியுற்றேன்.

"காந்தியார் தென்னாப்பிரிக்காவில் இருந்தபொழுது ஒரு முறை ஒரு வெள்ளையர், அவரைக் கக்கூஸ் எடுக்கச்சொல்ல, அதனைக் காந்தியார் மறுக்க, உடனே அவ்வெள்ளையன் தனது பூட்ஸ் காலில் அவரை உதைத்தானாம்; அப்பொழுது காந்தியார் தனது துன்பத்தை மறந்து, அவனிடம், 'உதைத்த உன்னுடைய கால் வலிக்குமே' என்று இரங்கினாராம்!

"அப்பொழுது — அடக்கப்படுதல், அடிபடுதல் போன்ற காலங்களில்—நல்லவர்கள் இருந்தனர்; இன்று காங்கிரசைவிட்டு நல்லவர்கள் ஒதுங்கிவிட்டனர்.

குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம்

'அமுலாகாதது ஏன்?'

அமைச்சர் கூறும் சமாதானம்

சென்னை, நவ. 14—

குதிரைப் பந்தய சூதாட்ட ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டு நெடுநாளாகியும் அதை அமுலாக்காமல் வைத்திருப்பதற்கான காரணங்களை அமைச்சர் பக்தவத்சலனார் நேற்று மேல் சட்டசபையில் விவரித்தார்.

இச்சட்டத்தை அமுல் நடத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகிறதாம்!

"இந்தச் சட்டம் அமுலாக்கப்படுவதை 5 ஆண்டு தள்ளிப் போடலாம் என்று சர்க்கார் முடிவு செய்தது; நல்ல சாதிக் குதிரைகள் வளர குதிரைப் பந்தயங்கள் உதவுகின்றன. இராணுவத்திற்கும், ஆராய்ச்சிக் கழகங்களுக்கும் குதிரைகள் தேவையாக இருக்கின்றன. 5 ஆண்டுக் கெடு தீர்ந்தபிறகு சட்டத்தை எப்பொழுது அமுலாக்கலாம் என்பது குறித்து சர்க்கார் பரிசீலிக்கும்" என்று அமைச்சர் விவரித்தார்.

'1956—57-ல் குதிரைப் பந்தயம் மூலம் சர்க்காருக்கு 15 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைத்தது' என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

வேலைநிறுத்தங்கள் இன்றைய உலகில் அபத்தமானவையாம்!

புதுடில்லி, நவ. 13—

தொழிலாளருக்கு வேலைநிறுத்தம் செய்ய உரிமை உண்டாம்; ஆனால், வேலைநிறுத்தங்களும் கதவடைப்புகளும் இன்றைய உலகில் பொருத்தமற்றவையாம்!

ஒருபுறம் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமெனப் பேசிக்கொண்டு மறுபுறம், தொழில் தகராறுகளில் சக்தியை விரயமாக்கிக் கொண்டிருப்பது என்பது அபத்தமாகும் என்று பண்டித நேரு, சர்வதேசத் தொழிலாளர் நிறுவனத்தின் ஆசியப் பிரதேச நான்காவது மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தி.மு.க.-சென்னை மாணவர் கிளை

தோழர்களுக்கு:

☆

"சென்னை நகரிலுள்ள தி. மு. க.—மாணவர் கிளைகளடங்கிய கூட்டம் 16—11—57 காலை 9-மணிக்கு நடைபெற இருக்கிறது; கிளைக் கழகங்களின் செயலாளர்கள், நிர்வாகிகள், மாணவ நண்பர்கள், சென்னை நகரிலுள்ள அமைப்புக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் வருகைதந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

"அன்று காலை தி. மு. க.—சட்டக் கல்லூரி மாணவர் கிளை அமைக்கப்பட இருக்கின்றது; சட்டக் கல்லூரியிலுள்ள மாணவர்கள் அனைவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"பிராட்வேயிலுள்ள சென்டினரி மண்டபத்தில் (பல்கலைக் கழக மாணவர் விடுதி--University Student's Club எதிரிலுள்ள கட்டிடம்) கூட்டம் நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது.

"தி. மு. க.—மாநில மாணவர் கிளையின் முன்னாள் பொதுச் செயலாளர், தோழர் கே. ஏ. மதியழகன் முன்னிலையில் கூட்டம் நடைபெறும்.

"கூட்டத்திற்கு அனைவரும் தவறாது வருகைதர வேண்டுகிறேன்.

அன்பன்
டி. கே. பொன்னுவேலு
அமைப்பாளன்,
தி. மு. க.—மாநில மாணவர்கிளை

அ. பொன்னம்பலனார்

நவ. 20-ல் தாயகம் திரும்புகிறார்

சென்னை, நவ. 13—

தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் மலாயா, சிங்கப்பூர் நாடுகளுக்கு கடந்த மே. திங்களில் சென்று, அங்கு கடந்த ஆறுமாத காலமாகத் தங்கியிருந்து, பல பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுவிட்டு, தாயகம் புறப்பட்டுவிட்டார்கள்.

இன்று, பினாங்கிலிருந்து கப்பல் ஏறுகிறார்கள்.

வரும் நவம்பர் 20-ந் தேதி காலை சென்னைத் துறைமுகம் வந்து சேரும் 'எஸ். எஸ். ஸ்டேட் ஆப் மெட்ராஸ்' என்ற கப்பலில் பொன்னம்பலனார் அவர்கள் வந்து சேருவார்கள்.

வரும் நேரம், பின்னர் அறிவிக்கப்படும்.

மலாயா, சிங்கப்பூர் நாடுகளில் சமூக சீர்திருத்தக் கருத்துக்களுக்கு நல்லாதரவு தேடி மகத்தான பணியாற்றிவிட்டுத் தாயகம் திரும்பும் அன்னாருக்கு, சிறப்பான தேநீர் வரவேற்பளிக்க சென்னையில் உள்ள கழகத் தோழர்களும், சார்பு மன்றத்தினரும் ஆர்வத்துடன் முயற்சித்துவருகின்றனர்.

இளங்கோ மன்றப் பொதுக்கூட்டம்

சென்னை, அயன்புரம், பொன்னுவேல் கிராமணி தோட்டத்தில் (சயானி டாக்கீஸ் அருகில்) தோழர் உ. கு. வில்லவன்கோதை தலைமையில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் தோழர் கி. மனோகரன், தோழியர் சத்தியவாணி முத்து எம்.எல்.ஏ., தோழர் ஆர். ஜார்ஜ் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். (தேதி கொடுக்கப்படவில்லை.)

இராமநாதபுரம் சம்பவங்கள்

மக்கள்சபையில் விவாதம் எழுப்ப முயற்சி

புதுடில்லி, நவ. 14—

இராமநாதபுரம் சம்பவங்கள் குறித்து மக்கள்சபையில் ஒரு விவாதத்தை எழுப்புவது என்று எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த ஆதித் திராவிட எம். பி.-க்கள் 25 பேர் இங்கு கூடி முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

பன்மொழிப்புலவர் மணிவிழா

சிறப்புக் கூட்டம்

அண்ணா, நெடுஞ்செழியன், கண்ணதாசன் கலந்துகொள்வர்

17-11-57 காலை 10-மணிக்கு, சென்னை—மயிலை இராஜேசுவரி பாடசாலையில் (குளக்கரை பஸ் நிலையம் அருகில்) 45-வதுவட்ட தி. மு. க. சார்பில் பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் மணிவிழா நிதிக்கான சிறப்புக் கூட்டமொன்று நடைபெறும். அண்ணா, இரா. நெடுஞ்செழியன், கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கழகக் கூட்டங்கள்

☆

சென்னை
பெத்துநாய்க்கன்பேட்டை—நம்புலையர் வீதியில்
(ரவுண்டு குழாய் சமீபம்)
15—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: என். வி. நடராசன்
பேசுவோர்:
மு. கருணாநிதி எம். எல். ஏ.
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
வி. முனுசாமி எம். சி.
தினகரன்

☆

அம்பத்தூர்
கடை வீதியில்
15—11—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: ஏ. பி. கண்ணையா
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
வி. எஸ். கோவிந்தராசன்
எஸ். சந்தராமணாளன்

☆

நமனசமுத்திரம்
(புதுக்கோட்டை)
15—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: அ. அன்புபித்தன்
பேசுவோர்:
க. அறிவழகன்
மா. கி. தசரதன்
எஸ். எஸ். தென்னரசு

☆

சென்னை (10-வது வட்டம்)
பிடாரியார் கோவில் தெருவில்
16—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: வீ. சீ. தமிழ்தாசன்
பேசுவோர்:
க. அன்பழகன் எம். எல். ஏ
கண்ணதாசன்

☆

மதுரமங்கலம்
16—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: கே. குப்புசாமி
பேசுவோர்:
அண்ணா
சி. வி. எம். அண்ணாமலை
தி. ந. சம்பந்தம்
(இரவு 9 மணிக்கு சமூக சீர்திருத்த நாடகம் நடைபெறும்)

☆

லா. தா. மணக்கால்
மண்டபம் முன்பு
16—11—57 மாலை 5½ மணிக்கு
தலைவர்: ம. கி. சோமசுந்தரம்
பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
அன்பில் தர்மலிங்கம்
நெடுமாறன்
மு. க. து. நடேசன்
இசை: கோ. நதிமாறன்

☆

திருப்புளியன்குடி
16—11—57 மாலை 6½மணிக்கு
தலைவர்: கோ. அஸரயா
பேசுவோர்:
எம். எஸ். சிவசாமி
ஆ. அண்ணாமலை

சென்னை 18-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு

16—11—57 இரவு 7 மணிக்கு மேற்படி வட்ட கிளைக் கழகப் பணிமனையில் தோழர் கோ. செங்குட்டுவன் (செ. மா. துணைச் செயலாளர்) தலைமையில் பொது உறுப்பினர்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் கிளைக் கழகச் செயலாளர் தேர்வு நடத்தப்பெறும்.

★★★★★★★★★★★★★★★★★★

மாதம் ரூ. 100 முதல் ரூ. 300 வரை

சம்பாதிக்கலாம்

எங்கள் ஸ்தாபனத்தில் தமிழில் தபால் மூலம் குறைந்த செலவில் ஹோமியோபதி படித்து டாக்டராகுங்கள். ஏழைகளுக்கு கட்டண சலுகை உண்டு.

விவரத்திற்கு எழுதுங்கள்:—
பாண்டியன் ஹோமியோபதி
இன்ஸ்டிடியூட்
21, வெள்ளியம்பலம் தெரு,
மதுரை

★★★★★★★★★★★★★★★★★★

பேராசிரியர் சுந்தரம்......

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பல மொழிகள் அனைத்தையும் விளக்கி—தமிழைப் போற்றிக் காக்க பல கருத்துக்களைக் கூறியுள்ளார். நாம் அனைவரும் அவரது வழிநின்று இப்பொழுது மத்திய அரசாங்கம் நம்மீது திணிக்கும் இந்தியை வன்மையாகக் கண்டித்து — இந்தி தமிழகத்தில் நுழையவிடாதபடி தமிழ்ப் பெண்மணிகள் அனைவரும் ஒருமுகமாக இருந்து கண்டிப்பதோடு நில்லாது, இந்தியின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட வேண்டும்."

மேலும் அவர், மணவழகர் மன்றம் நடத்தும் இரவுப்பள்ளி, திருக்குறள் வகுப்பு, பட்டிமன்றம் ஆகிய தொண்டுகளைப் பாராட்டிப் பேசினார்.

தோழியர்கள் அமுதா, பொற்செல்வி, தமிழ்ச்செல்வி, பார்வதி அம்மையார், அ. மங்கையர்க்கரசி, அனுசூயா-மோகனசுந்தரம் ஆகியவர்கள் இந்தித் திணிப்பைக் கண்டித்தும், சுந்தரம்பிள்ளை அவர்களின் தமிழ் ஆராய்ச்சியைப் பாராட்டிப் பேசினர்.

அழகிரி படிப்பகத் திறப்பு விழா

15—11—57 மாலை 6 மணியளவில், சென்னை-திருவல்லிக்கேணி, டாக்டர் நியமதுல்லா சாயபு தெருவில் மேற்படி விழா தோழர் கா. அப்பாதுரையார் தலைமையில் நடைபெறும். தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., படிப்பகத்தைத் திறந்துவைப்பார். தோழர் கே. ஆர். இராமசாமி என். எஸ். கே. படத்தைத் திறந்து வைப்பார். தோழர்கள் க. அன்பழகன் எம். எல். ஏ., நீல நாராயணன், மணிவர்மன் ஆகியோர் பேசுவர். தோழர் மு. இராமசாமி அவர்களால் காலை 10 மணிக்கு ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கப்படும்.

கோரேகான் தமிழ்ச் சங்க ஆண்டு விழா

நவம்பர் 16, 17, 18 ஆகிய தேதிகளில் பம்பாய், கோரேகான் தமிழ்ச் சங்க 4-ம் ஆண்டு விழா திரு. கி.வா. செகநாதன் தலைமையில் நடைபெறும். பம்பாய் சட்ட மன்றத் தலைவர் திரு. எஸ். எல். சிலம் விழாவைத் துவக்கி வைப்பார்.

புதுக்கோட்டை கல்லூரி பொருளாதார மன்ற சிறப்புக் கூட்டம்

15-11-57 மாலை 3-30 மணிக்கு நடைபெறவிருக்கும் புதுக்கோட்டை மன்னர் கல்லூரி சரித்திர, பொருளாதார மன்றத்தின் சிறப்புக்கூட்டத்தில் தோழர் க. அறிவழகன் 'தென்னாட்டுப் பொருள் வளம்' என்ற பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.